5. தொழில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் ஒட்டுமொத்த தமிழகமும் தொழிற்சாலைகள் நிறைந்த தமிழகமாக மாற்றப்பட வேண்டும்; பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் பெரும்பான்மையாக வர வேண்டும்; ஒட்டுமொத்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்ற தொலைநோக்கு பார்வையுடன் இன்றையதினம் தமிழகத்திற்கு விதி 110–ன்கீழ், 'யாதும் ஊரே', தொழிற்சாலைக்கு 60* MLD desalination water, *தொழில் தோழன், தொழில் வளர் தமிழகம்,* Plug & Play facilities, *தொழில் களம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு* TIDEL Park, *சிறு, குறு தொழிலுக்கு வழங்கப்படும் 3 சதவிகித வட்டி மானியத்தை 6 சதவிகிதமாக உயர்த்துதல், தனியாருடன் இணைந்து கூட்டாண்மை முறையில் தொழிற்பூங்கா உருவாக்குதல், தொழிற்சாலை பணியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டடம், ஒரு இலட்சம் சதுர அடியில்* Start–up facilities *போன்ற முத்தான 12 திட்டங்களை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தொழில் துறையின் சார்பாக எனது மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–55

***மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை இன்றைக்கு தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு, தொலைநோக்குச் சிந்தனையுடன் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மைல் கல்லாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்கு பெரும் ஊக்கமாக அமையக்கூடிய வகையில், முதலீட்டு மானியத்தின் உச்சவரம்பு 30 இலட்சம் ரூபாய் என்றிருந்ததை, 50 இலட்சம் ரூபாயாக இன்றைக்கு உயர்த்தியமைக்காகவும், அதேபோன்று, 64 கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 10,000–க்கும் மேற்பட்ட கிராமப்புற பெண்களுக்கு தொடர்ச்சியான வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடிய வகையிலே, குறிப்பாக கஜா புயலால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களை கடுமையான நிதி நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் விதமாக, அவர்களுக்கு புத்துயிரூட்டக்கூடிய வகையில் கருணை உள்ளத்தோடும், தாயுள்ளத்தோடும், இன்றைக்கு 2 கோடியே 33 இலட்சம் ரூபாய் வழங்கியமைக்காகவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு கயிறு தொழிலாளர்கள், கயிறு உற்பத்தியாளர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்கள் ஆகியோர்கள் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா முழுவதும் 13,000 தொழில் பயிற்சி நிலையங்களில் தர மதிப்பீடு ஆய்வு செய்யப்பட்டது. இதில், 123 தொழில் பயிற்சி நிலையங்களுக்கு* Three star grade *தரப்பட்டது. இதில் 27 தமிழ்நாடு அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் அடங்கியுள்ளன என்பது பெருமைக்குரியது. மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் திறமையான வழிகாட்டுதலால், தமிழகத்தைச் சேர்ந்த 40 தொழில் பயிற்சி நிலையங்களுக்கு* Three star grade *கிடைத்தது. இன்றைய நாள், இந்தத் தொழில் பயிற்சி நிலையங்களை விரிவாக்குவதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் மாண்புமிகு தமிழக முதலவர் அவர்கள் விதி 110–ன்கீழ் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைக்கு ரூ.142.10 கோடி ரூபாய் செலவில் 4 மகத்தான திட்டங்களை அறிவித்தமைக்காக என் சார்பிலும், என்னுடைய துறை சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*